பிரஸார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

26 07 2024 **FRIDAY** **6.30 PM**

முதலைப்புச் செய்திகள்

1. பாகிஸ்தான் ஆதரவிலான தீவிரவாத செயல்களுக்கு நமது படை வீரர்கள் உரிய பதிலடி கொடுப்பார்கள் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. மருந்து உற்பத்தியில் ஈடுபடும் சிறு-குறு தொழில் நிறுவனங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. உலக புத்தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு சென்னையில் அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெறும் என்று தமிழக அரசு கூறியுள்ளது.

4. கர்நாடக அணைகளிலிருந்து வெளியேற்றப்படும் உபரி நீர் காரணமாக ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து வினாடிக்கு 95 ஆயிரம் கனஅடிக்கும் கூடுதலாக அதிகரித்துள்ளது.

5. ஆசிய கோப்பை மகளிர் டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் --*

<<<<<<<>>>>>>

நாட்டிற்கு எதிராக தீவிரவாத செயல்களில் ஈடுபடுவோருக்கு நமது படை வீரர்கள் உரிய பதிலடி கொடுப்பார்கள் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார். கார்கில் போர் வெற்றி தினத்தையொட்டி, லடாக்கின் **Drass**-ல் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

நாட்டின் பாதுகாப்பு தளவாடங்கள் உற்பத்தி ஒன்றரை லட்சம் கோடி ரூபாயை தாண்டியுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார். பாதுகாப்பு தளவாடங்களை பொறுத்தவரை இறக்குமதி என்ற நிலையில் இருந்து, ஏற்றுமதி செய்யும் அளவிற்கு நமது திறன் உயர்ந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அக்னிபத் திட்டத்தை பற்றி எதிர்க்கட்சிகள் தவறான தகவல்களை பரப்புவதாகவும் திரு நரேந்திர மோடி குறை கூறினார். இந்நாளையொட்டி நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் கார்கில் போரில் நாட்டிற்காக உயிர் தியாகம் செய்த பாதுகாப்புப்படை வீரர்களுக்கு புகழஞ்சலி செலுத்தப்பட்டது.

<<<<<<<>>>>>>

மருந்து உற்பத்தி நிறுவனங்களின் வளர்ச்சிக்காக மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார். இன்று மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், சர்வதேச அளவில் குறைந்த செலவில் தரமான மருந்துகளை இந்தியா விநியோகம் செய்து வருவதாக குறிப்பிட்டார். மருந்து உற்பத்தியில் ஈடுபடும் சிறு-குறு தொழில் நிறுவனங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்றும் திரு ஜெ பி நட்டா தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

நாடு முழுவதும் அடுத்த மூன்றாண்டுகளுக்குள் 25 ஆயிரம் மக்கள் மருந்தகங்களை ஏற்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருப்பதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இன்று மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த உரத்துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல், தொடக்க வேளாண் கடன் சங்கங்களில் 547 மக்கள் மருந்தகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

<<<<<<<>>>>>>

கல்வித்துறையின் வளர்ச்சிக்கு தமிழக அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு ஐ பெரியசாமி கூறியுள்ளார்.

இன்று திண்டுக்கல்லில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநில அரசின் திட்டங்களை மாணவர்கள் முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

<<<<<<<>>>>>>

கோவிட் பாதிப்பு காலத்தில் நிறுத்தப்பட்ட பேருந்து வழித்தடங்கள் மீண்டும் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்று போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சிவசங்கர் கூறியுள்ளார்.

திருப்பத்தூர் பேருந்து நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஐந்து புதிய பேருந்துகளின் சேவையை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

திருப்பத்தூர் மாவட்டத்தில் பேருந்து சேவைகள் இல்லாத மலைவாழ் கிராம வழித்தடங்களில் புதிய பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

உலக புத்தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு சென்னையில் அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெறவுள்ளதாக சிறு-குறு தொழில்துறை அமைச்சர் திரு தா மோ அன்பரசன் கூறியுள்ளார்.

இன்று நெல்லையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

<<<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

நீலகிரி, கோவை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, கர்நாடக அணைகளிலிருந்து வெளியேற்றப்படும் உபரி நீர் காரணமாக ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து வினாடிக்கு 95 ஆயிரம் கனஅடிக்கும் கூடுதலாக அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்நிலையில், மேட்டூர் அணை அதன் முழு கொள்ளளவான 120 அடியை ஒருவாரத்தில் எட்டக்கூடும் என்பதால் சேலம், ஈரோடு, நாமக்கல் உள்ளிட்ட ஒன்பது மாவட்டங்களில் வெள்ள பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மத்திய நீர்வளத்துறை அறிவுறுத்தியுள்ளது.

<<<<<<<>>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

திருப்பூரில் பணியின்போது உயிரிழந்த பள்ளி வாகன ஓட்டுநரின் குடும்பத்தினருக்கு ஐந்து லட்சம் ரூபாய் நிதியுதவியை மாநில அமைச்சர் திரு சாமிநாதன் வழங்கினார்.

---------------

கார்கில் போரில் உயிர் தியாகம் செய்த பாதுகாப்புப்படை வீரர்களின் நினைவாக சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் புகைப்பட கண்காட்சி இன்று நடைபெற்றது.

--------

வேலூர் மாவட்டத்தில் மழை நீரை வீணாக்காமல் சேமிக்க பொதுமக்கள் முன்வர வேண்டும் என்று ஆட்சியர் திருமதி சுப்புலட்சுமி கேட்டுக்கொண்டுள்ளார்.

-------

நாமக்கல் மாவட்டத்தில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு தொடர்பான கையேட்டினை ஆட்சியர் டாக்டர் உமா இன்று வெளியிட்டார்.

-----------------

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகத்தின் விழுப்புரம் கோட்டம் சார்பில் ஆடி கிருத்திகையை முன்னிட்டு வரும் 27-ஆம் தேதி தொடங்கி, 29-ஆம் தேதிவரை வேலூர், அரக்கோணம், காஞ்சிபுரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து திருத்தணிக்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

ஆசிய கோப்பை மகளிர் டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

இலங்கையின் தம்புலாவில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா 10 விக்கெட் வித்தியாசத்தில் பங்களாதேஷை வென்றது.

இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த பங்களாதேஷ் தொடக்கம் முதலே விக்கெட்டுகளை இழக்கத்தொடங்கி 8 விக்கெட் இழப்பிற்கு 80 ரன் மட்டுமே எடுத்தது.

அதிகபட்சமாக **Nigar Sultana** 32 ரன் எடுத்தார்.

ரேணுகா சிங் மற்றும் ராதா யாதவ் அபாரமாக பந்துவீசி தலா மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பின்னர் களமிறங்கிய இந்தியா 11 ஓவரிலேயே விக்கெட் இழப்பின்றி 83 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

------------------

பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகள் வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளுடன் இன்று தொடங்குகின்றன.

இந்திய நேரப்படி இரவு 11 மணியளவில் தொடங்கும் இந்த நிகழ்ச்சி அதிகாலை மூன்று மணிவரை நடைபெறவுள்ளது.

ஒலிம்பிக் போட்டிகள் தொடங்கப்பட்டதன் நூற்றாண்டை குறிக்கும் வகையில், முதல் முறையாக தொடக்க விழா மைதானத்திற்கு பதிலாக, **Seine** ஆற்றையொட்டி நடைபெறுகிறது.

இந்தியா உட்பட பல்வேறு நாடுகளின் வீரர்கள் பங்கேற்கும் அணிவகுப்பு இந்த ஆற்றில் நடைபெறுகிறது.

இதற்காக 100 படகுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தியா சார்பில் இந்த அணிவகுப்பில் சரத் கமல் மற்றும் பி வி சிந்து தேசிய கொடியை ஏந்தி செல்கின்றனர்.

நம் நாட்டின் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் வகையில், உடைகளை அணிந்து இந்திய வீரர்கள் இந்த அணிவகுப்பில் பங்கேற்கின்றனர்.

அணிவகுப்பு முடிந்தபின் வண்ணமிகு கலைநிகழ்ச்சிகள் மூன்று மணிநேரத்திற்கும் மேலாக நடைபெறவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<<<<END>>>>>>**